**செய்தி வெளியீடு எண்.999** **நாள்.17.11.2008**

தமிழ்நாடு அரசு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் மேம்பாட்டு வளர்ச்சி சட்டம் 2006ன் கீழ் அரசாணை எண்.7, சிறு தொழில் துறை , நாள் 17.07.2007ன் படி சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் நான்கு குறு மற்றும் சிறுதொழில் நிறுவன வசதியாக்க மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இச்சட்டத்தின் அடிப்படையில் குறு மற்றும் சிறுதொழில் நிறுவனங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய, காலதாமதமான பணப்பட்டுவாடாக்கள் மீது சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க இந்த தீர்வு மன்றங்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின்படி குறு மற்றும் சிறுதொழில் நிறுவனங்களிடம் இருந்து பொருளை வாங்கும் நிறுவனம் உரிய காலத்தில் பணப்பட்டுவாடா செய்யாவிட்டால், அசல் தொகையுடன் ரிசர்வ் வங்கி விதித்துள்ள வட்டியினை போல 3 மடங்கு கூட்டு வட்டியும் சேர்த்து வசூல் செய்ய வழிவகை செய்கிறது.

சென்னை குறு மற்றும் சிறுதொழில் நிறுவன வசதியாக்க மன்றம் 31.10.2007 முதல் ஏற்கனவே நான்கு முறை கூடி சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை மற்றும் கடலூர் மாவட்டங்களைச் சேர்ந்த குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் மனுக்கள் மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டு, 19 மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டு, ரூ. 76.80 இலட்சங்கள் அளவில் நிறுவனங்களுக்கு நிலுவைத் தொகை பெற்றுத்தரப்பட்டது.

17.11.2008அன்று தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற்ற நான்காவது கூட்டத்தில், திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, மற்றும் கடலூர் மாவட்டங்களை சேர்ந்த 35 குறு மற்றும் சிறு தொழில் நிறுனங்களின் மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு, பணப்பட்டுவாடா செய்யாத நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது விசாரணை செய்யப்பட்டது. இவற்றில் 6 மனுக்கள் மீது ரூ.17.75 இலட்சம் அளவில் உடனடியாக இக்கூட்டத்திலேயே தீர்வு காணப்பட்டன.

தொழில் ஆணையர் (ம) தொழில் வணிக இயக்குநர் திரு கோ. சந்தானம், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சிறு மற்றும் குறுந்தொழில் நிறுவன தொழில் மற்றும் நிதி மறுசீரமைப்பு கூட்டமைப்பின் தலைவர் திரு.டி.இராமகிருஷ்ணன், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் முதன்மை வங்கி முதன்மை மேலாளர் (கடன் வசதி) திரு.A.ரவி, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக மண்டல மேலாளர், திரு. டி. கிருபாகரன் ஆகிய உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

மேற்படி அரசாணைக்குட்பட்டு, பாக்கி தொகை சேர வேண்டிய குறு, சிறு தொழில் நிறுவனங்கள் தகுந்த ஆதாரங்கள் மற்றும் உறுதி மொழி பத்திரம், வேண்டுகோள் கடிதங்களுடன் கிண்டி தொழிற்பேட்டையில் அமைந்துள்ள நுண் மற்றும் சிறுதொழில் நிறுவன வசதியாக்க மன்றத்தில் முறையிடலாம்.

தொழில் ஆணையர் (ம) தொழில் வணிக இயக்குநருக்காக.

வெளியீடு: **இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**

**Press Release No.999** **Dt.17.11.2008**

**PRESS NOTE ON**

**The Micro and Small Enterprise Facilitation Council for Chennai Region**

****

Government of Tamil Nadu in G.O.Ms.No.7, Small Industries (SIF) Department dated 17.07.07, have established four Micro and Small Enterprises Facilitation Councils for Chennai, Thiruchirapalli, Madurai & Coimbatore Regions constituted as per provisions of the Micro, Small and Medium Enterprises Development Act 2006, The councils have been vested with legal powers to act on delayed payments to Micro and Small Enterprises, by providing alternate dispute resolution services with jurisdiction to act as an Arbitrator or Conciliator in respect of disputes arising between the supplier Micro Small Enterprise located within the Council's jurisdiction and a buyer located anywhere in India. As per the provisions of the Act, the buyers, if they fail to make payment to the supplier (Micro and Small Enterprises) within the date agreed upon, are liable to pay the principle amount along with **Compound Interest with monthly rests to the supplier units at 3 times of interest notified by the Reserve Bank of India.**

As per the above G.O. cited, already four **Micro and Small Enterprise Facilitation Council** for **Chennai Region**, meetings were held and orders passed on **19** cases and an amount of **Rs.76.80** lakhs payment dues were collected.

The fifth Council meeting was held at Conference Hall, O/o the Industries Commissioner and Director of Industries and Commerce, Chepauk, Chennai - 5 on **17.11.2008.** In this Council meeting, **35 petitions** were heard and taken up for discussions necessary orders were passed. Out of which, **4** cases have been adjudicated and **2** cases were settled. Amount settled was **Rs.17.75** lakhs.

**Thiru. G. Santhanam, I.A.S.**, Industries Commissioner and Director of Industries and Commerce, Thiru A. Ravi, Chief Manager, Indian Overseas Bank (Lead Bank), Thiru De. Ramakrishnan, President, Industrial Finance, Reconstruction Association for Tiny Industries and Thiru T. Kirubakaran, Regional Manager, Tamilnadu Industrial Investment Corporation have participated in the above meeting.

In order to facilitate settlement of outstanding dues of Small and Micro Enterprises. The Micro, Small Enterprises those who have been affected by delayed payment issues from the buyer may file their requests with prayer petition, affidavit and necessary copies of evident documents to the **Zonal Officer, Micro, Small Enterprises Facilitation Council / Regional Joint Director of Industries and Commerce, Guindy, Chennai - 32.**

**for Industries Commissioner and**
**Director of Industries and Commerce**

**Issued by: DIPR,Chennai-9.**